# 'பெண்களுக்கு ஆதரவளிக்கக் கொள்கைகளும் சமூக வழக்கங்களும் மறுஆய்வு செய்யப்படவேண்டும்'

***Seithi Mediacorp***, 3rd June 2021

ஒட்டுமொத்த சமுதாயமாகப் பெண்களுக்கு ஆதரவளிக்கக் கொள்கைகளும் சமூக வழக்கங்களும் மறுஆய்வு செய்யப்படவேண்டும் என்று அதிபர் ஹலிமா யாக்கோப் (Halimah Yacob) கூறியுள்ளார்.

பெண்களின் நலன்களை மேம்படுத்துவது தொடர்பான வெள்ளையறிக்கை இவ்வாண்டின் பிற்பகுதியில் வெளியிடப்படவுள்ளது.

அதற்கு முன்னதாகத் திருவாட்டி ஹலிமாவின் கருத்துகள் வெளியாகியுள்ளன.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் மாநாட்டில் இணையம் வழியாக அவர் கலந்துகொண்டார்.

வேலை, குடும்பம் ஆகியவற்றின் தேவைகளைச் சமமாகக் கையாள்வதற்கு உதவ, முதலாளிகளும் குடும்ப உறுப்பினர்களும் முன்வரவேண்டும் என்று திருவாட்டி ஹலிமா வலியுறுத்தினார்.